DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT/SPECIAL COURT UNDER E.C ACT CASES, THANJAVUR

C.C.No. -42/2023

Prosecution PW -1

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.துளசி | Occupation | |
| Husband/Father Name | | Village | |
| Taluk | | Age | |
| Date | 09.02.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

Accused A1 to A3,A5 present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்பொழுது நெய்வேலி நகர காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27.02.2022ம் தேதி வடலூர் காவல்நிலையத்தில் இரண்டாம் நிலைய காவலராக பணியிலிருந்தபோது, ஆய்வாளர் விஷ்னுபிரியா அவர்களுடன் நானும், சிறப்பு உதவி ஆய்வாளர் முருகன் ஆகியோருடன் வடலூர் நகர பகுதியில் ரோந்து பணியிலிருந்தபோது, மாலை 3.00 மணியளவில் வள்ளலார் பேருநது நிலையத்தில் கடலூர் செல்லும் பேருந்து மார்க்கம் அருகில் 5 நபர்கள் கஞ்சா வாங்கி வந்து விற்பனைக்கு வைத்திருப்பதாக ஆய்வாளருக்கு கிடைத்த தகவலின் பேரில் காவல் துணைகண்காணிப்பாளரிடம் தகவல் சொல்லி விட்டு எங்களை அழைத்துக்கொண்டு தேவையான உபகரணங்களுடன் சம்பவ இடத்திற்கு வந்தோம். எங்களைப் பார்த்ததும் 2 நபர்கள் தப்பித்து ஓடி விட்டார்கள். 3 நபர்கள் அப்பாச்சி இருசக்கர வாகனம் பதிவு எண் TN-91-Y-7281 என்ற பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்தில் தப்பிக்க முயன்றவர்களை மடக்கி பிடித்து ஆய்வாளர் விசாரித்தார். அவர்கள் தங்கள் பெயர்களை மாற்றி மாற்றி கூறி, இறுதியாக தேவநாதன், தினேஷ் ராஜா என்று பெயர் விலாசத்துடன் கூறினார்கள், தப்பி ஓடிய நபர்களை குறித்து விசாரிக்க அவர்கள் பெயர் ரங்கன் மற்றும் பிரவின் குமார் என்று கூறினார்கள், பின்னர் ஆய்வாளர் எதிரிகளை சோதனை போட 1 வது எதிரி தன் கையில் வைத்திருந்த மஞ்சள் பையில் 1.500 கிலோ கஞ்சா வைத்திருப்பதாகச் சொன்னார். தப்பி ஓடிய எதிரிகளான ரங்கள் மற்றும் பிரவின்குமார் வாங்கி வந்து கொடுத்து அதை பிரித்து விற்பனை

செய்வதாக கூறி அதன் படி கஞ்சாவை பிரித்து விற்பனைக்கு வைத்திருந்ததாகக் கூறினார். பின்னர் 15.15 மணிக்கு எதிரிகளை குற்ற காரணம் கூறி ஆய்வாளர் கைது செய்தார். பின்னர் ஆய்வாளர் 1 முதல் 3 எதிரிகளுக்கு சோதனை அறிவிப்பு நமுனா தனித்தனியாக சார்வு செய்தார். அதில் நானும், சிறப்பு உதவி ஆய்வாளர் முருகனும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். அந்த சோதனை அறிவிப்பு நமுனாக்கள் அதசாஆ.1 முதல் 3. பின்னர் 1வது எதிரி தமாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை ஆய்வாளர் என் முன்பாகவும், சிறப்பு உதவி ஆய்வாளர் முருகன் முன்பாகவும் பதிவு செய்தார். பின்னர் எதிரி வைத்திருந்த கஞ்சாவை நாங்கள் கொண்டு சென்ற தராசில் எடைபோட்டுப் பார்க்க 1.500 கிலோ இருந்தது. பின்னர் கைப்பற்றிய கஞ்சாவிலிருந்து பகுப்பாய்விற்காக 100 கிராம் கஞ்சாவை எடுத்து பாலிதின் கவரில் போட்டு நூலால் கட்டி SHO சீல் வைத்தார். மீதமுள்ள அதே பாலிதின் கவரில் போட்டு நூலால் கட்டி SHO சீல் வைத்தார். மாதிரி கஞ்சாவையும் மீதமுள்ள கஞ்சாவையும் அயவாளர் மகசரில் கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகசரில் நானும் சிறப்பு உதவி ஆய்வாளர் முருகனும் சாட்சி கையொப்பம் செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகசர் அதசாஆ.4. பின்னர் 3வது எதிரி வைத்திருந்த அப்பாச்சி இருசக்கர வாகனத்தை ஆய்வாளர் மகசரில் கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகசரில் நானும் சிறப்பு உதவி ஆய்வாளர் முருகனும் சாட்சி கையொப்பம் செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகசர் அதசாஆ 5. இருசக்கர வாகனம் அரசுக்கு ஆதாயம் செய்யப்பட்டு விட்டது. அதன் புகைப்படம் சா.பொ.1. பின்னர் 17.15 மணிக்கு எதிரிகள் மற்றும் தடயச் சொத்துடன் ஆய்வாளர் நிலையம் வந்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார் அதற்கு நான் உதவியாக இருந்தேன். பின்னர் 18.00 மணிக்கு மீண்டும் ஆய்வாளருடன் சம்பவ இடம் சென்று ஆய்வாளர் சம்பவ இடத்தை என் முன்பாகவும், முருகன் முன்பாகவும் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். பார்வை மகசர் அதசாஆ.6. ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை எதிரி தரப்பில்</u>

சம்பவ இடம் பேருந்து நிறுத்தம் என்பதால் மக்கள் நடமாட்டம் இருக்கும் என்றால் சரிதான். தனிநபர்களை ஆய்வாளரோ நாங்களே சாட்சியாக அழைக்கவில்லை என்றால் சரிதான். அதசாஆ.1 முதல் 3 கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதசாஆ.1 முதல் 3 ஐ காவல் நிலையத்தில் தட்டச்சு செய்யப்பட்டது என்றால்

சரியல்ல. எங்கு தட்டச்சு செய்யப்பட்டது என்று ஞாபகம் இல்லை. கைப்பற்றுதல் மகசரில் எதிரிகளின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். கஞ்சா இருந்த மஞ்சப்பையை ஆய்வாளர் என்ன செய்தார் என்றால் ஞாபகம் இல்லை. அதைக் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். சொன்ன நேரம் நாள் எந்த தகவலும் வரவில்லை என்றாலும், எதிரிகளை கைது செய்யவில்லை என்றாலும், 1 வது எதிரி எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும், எந்த தடய பொருளும் கைப்பற்றவில்லை என்றாலும் சரியல்ல. அனைத்து ஆவணங்களும் தடய பொருட்களும் காவல் நிலையத்தில் பின்னிட்டு தயார் செய்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. மாதிரி கஞ்சா நீதித்துறை நடுவர் முன்பாக எடுக்கவில்லை என்றால் சரிதான்.

நான் சொல்ல என் உத்தரவுபடி தட்டச்சிடப்பட்டு
என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும் சாட்சிக்குப் படித்து
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்
கொள்ளப்பட்டது.

ஒம்/-...ஜி.சுந்தரராஜன்,
கூடுதல் மாவட்ட(ம) அமர்வு நீதிபதி,
இன்றியமையாப் பண்டங்கள் சட்ட சிறப்பு நீதிமன்றம்,
தஞ்சாவூர்